செ.வெ.எண்: 269 நாள்: 23.04.2018

திருநெல்வேலியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

------

திருநெல்வேலி பாளையங்கோட்டை வ.உ.சி பூங்காவில் சாலை பாதுகாப்பு வார விழாவினை துவக்கும் வகையில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி இன்று (23.04.2018) நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். மேலும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தையும் துவக்கி வைத்தார். தொடர்ந்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

29 வது சாலை பாதுகாப்பு வார விழா இந்த ஆண்டு இன்று முதல் 29.04.2018 வரை நாடு முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. நமது மாநிலத்திலும், நமது மாவட்டத்திலும் சாலை பாதுகாப்பு - உயிர் பாதுகாப்பு என்ற வாசகத்துடன் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்படுகிறது. சாலை பாதுகாப்பு விழிப்புணர்வின் மூலம் சாலையை உபயோகப்படுத்தும் பல்வேறு தரப்பு மக்களுக்கும் சாலை பாதுகாப்பின் அவசியத்தினை அறியவைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தி சாலை விபத்துகளை குறைப்பதே இதன் நோக்கமாகும். இரு சக்கர வாகன ஓட்டிகள் ஹெல்மெட் அணிவது, நான்கு சக்கர வாகனங்களில் செல்வோர் சீட் பெல்ட் அணிவது, சாலை விதிமுறைகளை பின்பற்றுதல், குடிபோதையில் வாகனங்களை ஓட்டுவதால் ஏற்படும் விபத்துகள் உள்ளிட்ட விழிப்புணர்வை மாவட்ட முழுவதும் ஏற்படுத்தி விபத்துகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒரு வார காலம் கல்லூரி மாணவர்கள், நாங்குநேரி சுங்கச்சாவடி, முக்கிய சாலை சந்திப்புகள், மக்கள் அதிகம் கூடும் இடங்கள் உள்ளிட்டவைகளின் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், ஊர் காவல்படை, அரசு சார நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகளின் மூலம் பல்வேறு விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படவுள்ளது. பொதுமக்கள் அனைவரும் சாலை விதிகளை அறிந்து அவைகளை முழுமையாக பின்பற்றியும் மற்றவர்களுக்கு எடுத்துக்கூறியும் விபத்துகள் இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்த பேரணியில் ஓட்டுநர் பயிற்சி பள்ளி பணியாளர்கள், வாகன விற்பனையாளர்களின் பிரதிநிதிகள், ஐ.ஆர்.டி ஓட்டுநர்கள், என்.எஸ்.எஸ் மாணவர்கள், ஊர் காவல் படையினர், அரசு போக்குவரத்துக்கழகம் மற்றும் காவல்துறை ஓட்டுநர்கள் உட்பட 500 க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர். பேரணி வ.உ.சி மைதானத்தில் தொடங்கி செல்லப்பாண்டியன் சிலை அருகே முடிவடைந்தது. விழிப்புணர்வு பதகைகளை ஏந்தியும் கோசமிட்டும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் துணை போக்குவரத்து ஆணையர் திரு.மணக்குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக திருநெல்வேலி கோட்ட மேலாண்மை இயக்குநர் திரு.மோனி, மாநகர காவல் உதவி ஆணையர் திரு.விஜயகுமார், திருநெல்வேலி வட்டார போக்குவரத்து அலுவலர் திருமதி.சசி, சங்கரன்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சரவணபவன், அரசு போக்குவரத்துக்கழக துணை மேலாளர்கள் திரு.சுப்பிரமணியன், திரு.சசிகுமார், திரு.அருணாச்சலம் மற்றும் திருநெல்வேலி சரக மோட்டர் வாகன ஆய்வாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.